**தேசிய கைப்பணிகள் மன்றம் - 2010**

**------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

-----------------------------------

### 1.1 அபிப்பிராயம்

--------------------

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தேசிய கைப்பணிகள் மன்றம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய கைப்பணிகள் மன்றத்தின் நிதிசார் நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------------

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேமிப்பு வங்கிக் கணக்கொன்றில் 2006 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 140,158 ஆன மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவ்வாறே கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததுடன் உரிய வட்டி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைப்பணிப் பயிற்சிப் பிரிவில் மீளாய்வாண்டிற்குரிய 5 செலவின விடயங்களின் கூட்டுப் பெறுமதியான ரூபா 155,900 இற்காக அட்டுறு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கைப்பணிப் பயிற்சி பிரிவின் கீழுள்ள கைப்பணி பயிற்சி நிலையத்திற்குரிய 123 சேமிப்பு வங்கிக் கணக்குகளின் மீதிப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,685,846 ஆனது கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சொத்துக்கள் கையளிக்கப்படாத காரணத்தினால் கைப்பணிப் பயிற்சி நிலையங்களின் நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டின் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்குகள் இணங்காமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கைப்பணிகள் மன்றத்தின் நிலையான சொத்துக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கும் நிலையான சொத்துப் பதிவேடுகளுக்குமிடையே ரூபா 3,423,902 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) இறுதிக் கணக்குகளின் பிரகாரம் காப்புறுதிக் கட்டணம், அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் காரியாலய உபகரண திருத்தங்களின் பெறுமதி ரூபா 69,385 ஆக இருந்த போதும் கணக்குகளின் பட்டோலைகளில் ரூபா 123,239 எனக் காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வேறுபாடு ரூபா 53,854 ஆக இருந்தது.

(இ) கைப்பணிப் பயிற்சிப் பிரிவின் பரீட்சை மீதி மற்றும் பேரேடுகளின் பிரகாரம் ரூபா 5,228,662 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) பட்டோலைகளின் பிரகாரம் கைப்பணிப் பயிற்சிப் பிரிவின் கடன்மீதி ரூபா 258,500 ஆக இருந்த போதிலும் ஆளுக்குரிய கடன் பேரேட்டின் பிரகாரம் கடன்மீதி ரூபா 171,000 எனக் காட்டப்பட்டிருந்தது. வேறுபாடு ரூபா 87,500 ஆக இருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் (நி.பி) | |
| (i) நி.பி 133 | மன்றத்தினால் உள்ளகக் கணக்காய்வுக் கூறு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 135 | செலவினங்களை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தலின்றி ரூபா 534,720 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நி.பி 371(2)(இ) | செலவினத்தைத் தீர்ப்பதற்காக வழங்கப்படுகின்ற விசேட முற்பணங்கள் அவை வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதும் 2011 ஏப்ரல் வரை ரூபா 751,568 ஆன முற்பண மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீளம்ஏ/ 2009(1) ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் 2010 நவம்பர் 30 ஆந் திகதிய பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறு முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் கடிதம் | ஒரு வருடத்தில் ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 04 தடவைகள் நடைபெற வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 01 கூட்டம் மாத்திரமே நடைபெற்றிருந்தது. |
| (இ) 2010 மார்ச் 30 ஆந் திகதிய 34(II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் | மாதாந்த சம்பளம் ரூபா 16,085 முதல் ரூபா 21,284 வரையாகவுள்ள உத்தியோகத்தர்களுக்கு உரித்தான இணைந்த படிகள் ரூபா 400 ஆக இருந்த போதும் இச்சுற்றுநிருபத்திற்கு முரணாக ரூபா 500 படி செலுத்தப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 155,503 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மன்றத்தின் நடவடிக்கைகளால் நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட பற்றாக்குறை ரூபா 6,376,395 ஆக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,732,297 ஆக இருந்தமையினால் நிதிசார் விளைவுகள் ரூபா 4,644,098 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2009 யூன் மாதத்திலிருந்து இலங்கை கைப்பணிகள் மன்றத்தின் கீழ் காணப்பட்ட கைப்பணிப் பயிற்சிப் பிரிவு தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டமையினால் திறைசேரியிலிருந்து கிடைக்கின்ற நிதி ஏற்பாடுகள் 2009 ஆம் ஆண்டைவிட மீளாய்வாண்டிற்காக ரூபா 18,816,000 இனால் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு ஒப்பீடாக மொத்தச் செலவினம் 2009 ஆம் ஆண்டைவிட மீளாய்வாண்டின் போது ரூபா 22,912,928 இனால் அதிகரித்திருந்தமையினால் நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்குத் தாக்கமளித்திருந்தன.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பத்தரமுல்ல தேசிய கைப்பணிகள் பிரதேசத்தில் கதவுகளில் அலங்காரங்கள் செதுக்கும் கைப்பணியாளர்களுக்கும் லேஸ் பின்னுபவர்களுக்குமான பயிற்சி வழங்கும் நிலையத்திலும் மரப்பலகைகளில் வடிவங்கள் செதுக்கும் கைப்பணியாளர்கள் பயிற்சி நிலையத்திலும் ஒரு ஆசிரியையும் ஒரு ஆசிரியரும் மரப்பலகைகளில் வடிவங்கள் செதுக்கும் கைப்பணியாளர் பயிற்சி நிலையத்தில் ஒரு மாணவரும் இருந்தனர். இதன் பிரகாரம் மனிதவளம் குறைப்பயன்பாடுடையதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நோக்கங்களை அடைவதற்காக போதியளவில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பௌதீக முன்னேற்றம் தொடர்பாக 2 விடயங்களில் எவ்வித உள்ளவாறான முன்னேற்றம்

காணப்படாததுடன் 2 விடயங்களில் உள்ளவாறான முன்னேற்ற வீதம் 30% இனை விட குறைவாகக் காணப்பட்டது. அவ்வாறே நிதி முன்னேற்றம் தொடர்பாக 3 விடயங்களில் உள்ளவாறான முன்னேற்ற வீதம் 30% இனைவிட குறைவாகக் காணப்பட்டது.

### 2.2.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சீகிரிய தகவல் நிலையத்தின் நிர்மாண செயற்திட்டத்தின் மீதிப் பணமான ரூபா 1,317,977 ஆனது மூன்று வருடகாலமாக எவ்வித செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் கைப்பணிகள் சபையின் கைப்பணிப் பயிற்சிப் பிரிவு 2009 மே 01 ஆந் திகதி தேசிய கைப்பணிகள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மனிதவளம் மற்றும் நிலையான சொத்துக்கள் என்பன முறையான வகையில் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கைப்பணிகளுக்காக உள்நாட்டு மூலப்பொருட்கள் உள்ளீடாகப் பயன்படுத்துவதன் ஊடாக கைப்பணியாளர்களின் உற்பத்தியை மேலோங்கச் செய்தல் மற்றும் கைப்பணியாளர்களுக்காக அருமையான மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் அந்நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் என்பன தேசிய கைப்பணியாளர் மன்றத்தின் பிரதான நோக்கமாக இருந்த போதிலும் மன்றத்தினால் கைப்பணியாளர்களுக்கு வெள்ளி மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) மன்றத்தின் 2010 ஆம் ஆண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உத்தியோகத்தர்கள் 88 ஆக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதியில் 29 உள்ளவாறான பதவியணியினர் 58 ஆக இருந்தது. 29 வெற்றிடங்களில் 24 வெற்றிடங்கள் பதவிநிலைத்தரங்களில் காணப்பட்டதுடன் இப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**2.2.3 இனங்காணப்பட்ட நட்டம்**

கணக்காளருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 51,225 ஆன பதில் கடமைக் கொடுப்பனவை உத்தியோகத்தர் தேசிய கைப்பணிகள் மன்றத்திலிருந்து விலகும் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

2010 ஆம் ஆண்டிற்கான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்காத காரணத்தினால் உள்ளவாறான பெறுமதிகளை பாதீட்டுப் பெறுமதிகளுடன் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் மீது விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) முற்பணத்தைக் கொடுப்பனவு செய்தலும் தீர்த்து வைத்தலும்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) கணக்கீடு
(உ) மனித வள முகாமைத்துவம்